SRI SANKARA ARTS AND SCIENCE COLLEGE
Autonomous
A Unit of Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust
and Affiliated to University of Madras / Accredited by NAAC with 'A' Grade
ENATHUR, KANCHIPURAM - 631 561.
Phone : 044-27264066
Mail : admin@sankaracollege.edu.in Website : www.sankaracollege.edu.in

06/08/2024

# MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES

**Department** : Tamil

**Venue** : Board Room

**Date** : AUGUST 6th , 2024

**Agenda** : Planning for the new curriculum review, student assessment methods, and future subject-specific events implemented in the 2023-24 academic year.

**The following members were present in the meeting:**

1. Dr. J. RADHAKRISHNAN, Assistant Professor & Head, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Chairman
2. Dr. G. JAYASHREE, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
3. Dr. T.S.JEYALAKSHMI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
4. Dr. S.SIVAGAMASUNDARI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
5. Mr. S. DEIVASIGAMANI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member.
6. Dr. S. NEELAMEGAN, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
7. Dr. N. APPADURAI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
8. Mr. B. VELU, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
9. Mr. M. GANAPATHY, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member

10. Dr. M. ANBAZHAGAN, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.

11. Dr. K.R. VENKATESAN, Principal, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Special invitee

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

1. **Nil**

*2023 - 24 ஆம் கல்வியாண்டில் நடைமுறைப்படுத்தப்பெற்ற புதிய பாடத்திட்டம் ஓராண்டை கடந்த நிலையில் அவற்றைக் குறித்த மதிப்பீட்டாய்வாகவும் செயல்வழித்தேர்வு அகமதிப்பீடு மற்றும் எதிர்கால நிகழ்வுகள் குறித்த திட்டமிடலாகவும் 06.08.2024 அன்று நடைபெற்ற பாடத்திட்டக் குழுக்கூட்டம் அமைந்தது. அதில் பின்வரும் ஆலோசனைகள் மற்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன:*

***1. பாட நூல் உருவாக்கம் மற்றும் தேவை:***

இளங்கலை முதலாம் ஆண்டு பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள **'தமிழியல் கல்வி ஆதார வளங்கள்'** மற்றும் **'தமிழ் மொழி அமைப்பியல்'** ஆகிய பாடங்களுக்குப் போதுமான தகவல்கள் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடப்பதாலும், புதிய வளர்ச்சிகளுக்குத் தகவும் மாணவர்களின் புரிதலுக்கு ஏற்பவும் 'தக்க பாட நூல்கள்' இல்லாதது குழுவால் உணரப்பட்டது. எனவே, துறையின் சார்பில் மூத்த ஆசிரியர்களைக் கொண்டு இப்பாடங்களுக்கு விரிவான பாட நூல்களை *(Content Creation)* உடனடியாக உருவாக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

***2. பாடத்திட்ட அடர்த்தி குறித்த விவாதம்:***

இளங்கலை முதல் பருவத்தில் பயிற்றுவிக்கப்படும் **'இக்கால இலக்கியம்'** மற்றும் **'தமிழக வரலாறும் பண்பாடும்'** ஆகிய பாடங்கள் மிக விரிவாக இருப்பதால், நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் பாடங்களை முழுமையாக நடத்தி முடிப்பதில் உள்ள நடைமுறைச் சிரமங்கள் குறித்துப் பேசப்பட்டது. இதனை நிவர்த்தி செய்ய கூடுதல் சிறப்பு வகுப்புகளை நடத்துவது அல்லது பாடங்களின் உள்ளடக்கத்தைச் சற்றே சுருக்குவது, களப்பயணம், கருத்தரங்கம், சுயமாக கற்றல் பயிற்சிகள் வழி நிரப்பவும்

எதிர்காலத்தில் பாடத்திட்டத் திருத்தத்தின்போது பழையபடி இரண்டிரண்டு பாடங்களாகப் பகுக்கலாம் எனவும் பரிந்துரைக்கப்பெற்றது.

### *3. மதிப்பீட்டு முறை மாற்றம் (செயல்வழித் தேர்வுகள்):*

மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் நேரடித் திறனை மேம்படுத்தும் நோக்கில் நடந்துமுடிந்த பருவங்களில் பின்வரும் பாடங்களுக்கு **'செயல்வழித் தேர்வுகள்'** *(Practical Baset Assessment)* சிறப்பாக நடத்தப்பெற்றமை பாடத்திட்டக்குழுவால் பாராட்டப்பெற்று மேலும் சில பாடங்களுக்கும் பரிந்துரைக்கப்பெற்றன.

இளங்கலையில் **பேச்சுக்கலைத் திறன்** - அறிவன் வட்டத்தில் பேசுதல், **தமிழில் சிறார் இலக்கியம்** - நாட்டுப்புற சிறார் பாடல்கள், கதைகள் ஒலிப்பதிவாக திரட்டுதல், **நூலகவியல்** - நூல் அடைவு செய்தல், மொழிபெயர்ப்பியல் - மொழிபெயர்ப்பு நூல்களில் ஒன்றை தேர்வு செய்து அறிமுகப்படுத்துதல் எனவும், அதேபோல் முதுகலையில் **நோக்கு நூல்கள்** - ஆய்வுக்கு உதவும் கருவி நூல்களை அறிமுகம் செய்தல், **ஊடகத்தமிழ்** - ஊடகத்திற்கு தக்கவாறு உள்ளடக்கங்களை உருவாக்குதல், **அகராதியியல்** - இணைய அகராதிகளை திரட்டி அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொருவர் அறிமுகப்படுத்துதல் எனவும் **'செயல்வழித் தேர்வுகள்'** *(Practical Best Assessment)* பரிந்துரைக்கப்பெற்றன. தொடர்ந்து, அடுத்த ஆண்டு இவற்றுக்கு மாற்றாக **தமிழர் மரபு மருத்துவம், கல்வெட்டியல், பெண் எழுத்து, தமிழ்க்கலை மரபும் பண்பாடும், நாட்டார் மரபுகள், இதழியல்** மற்றும் **பதிப்புக்கலை** பாடங்களுக்கும் 'செயல்வழித் தேர்வுகள்' அறிமுகப்படுத்த முடிவுசெய்யப்பெற்றது.

### *4. பயிலரங்குகள், கண்காட்சிகள், களப்பயணங்கள் மற்றும் கருத்தரங்குகள்*

பாடத்திட்டத்தையொட்டிய இன்றியமையாத துறைகளில் பயிலரங்கங்கள், கருத்தரங்கங்கள் அமைக்க வேண்டும் எனத் திட்டமிட்டு காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகத்துடன் இணைந்து *24.06.2024* முதல் *28.06.2024* வரை **'கலைப் பொருள் பராமரிப்பு'** குறித்த பயிற்சி பட்டறை நடத்தப்பெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை மேற்பார்வையில் இயங்கும் தொல்லியல் கழகம் மற்றும் விழுப்புரம் உமா கல்வி அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து *15/07/2024* முதல் *19/07/2024* வரை **தொல்லியல் பயிலரங்கம்** மற்றும் **தொல்லியல் மற்றும் நாணயவியல் கண்காட்சி**, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கிடையேயான **ஓவியம் மற்றும் புகைப்படப்**

**போட்டிகள்** நடத்தப்பெற்றன. தொடர்ந்து 20/07/2024 மற்றும் 21/07/2024 ஆகிய தேதிகளில் **தொல்லியல் தேசியக் கருத்தரங்கம்** மற்றும் **ஆவணம் ஆய்விதழ் வெளியீட்டுவிழா** நடைபெற்றது. இதில் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல தொல்லியல் அறிஞர்கள் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர்; தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். மேலும் 19/07/2024 ஆம் தேதி தூசி மாமண்டூர், கூழமந்தல் ஆகிய தொல்லியல் களங்களுக்கும் 20/07/2024 ஆம் தேதி காஞ்சிபுரத்தில் உள்ள பல்லவர் கால சிற்றாலயங்களுக்கும் களப்பயணமாக உரிய வல்லுநர்களுடன் மாணவர்கள் அழைத்துச் செல்லப்பெற்றனர். இவை வரலாறும், பண்பாடும் பயிலும் மாணவர்கள் நேரடியாக தங்கள் மென்திறன்களைப் பல நிலைகளில் வளர்த்துக்கொள்ளப் பயன்படுத்தப்பெற்றது. இவ்வாறே மொழி ஆளுமை திறன்கள், வாழ்வியல் திறன்கள் சார்ந்தும் நாட்டுப்புற கலைகள் சார்ந்தும் பயிலரங்குகள் மற்றும் நாட்டுப்புறவியல் கண்காட்சிகள் அமைக்க வேண்டும் என முடிவுசெய்யப்பெற்றது. தமிழ் கணினி சார்ந்த தொடர் பயிற்சி வகுப்புகளைக் **கணித்தமிழ்ப் பேரவை** வாயிலாக தொடர்ந்து முன்னெடுப்பது என முடிவுசெய்யப்பெற்றது.

### 5. ஆய்வுத்திட்டங்கள் மற்றும் ஆய்வு மாநாடு

இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் நிறைவாண்டில் வழங்கும் திட்டக்கட்டுரைகளுக்கான பயிற்சியை வழங்கும் வகையில் தொடர் ஆய்வரங்குகளை நடத்த ஆலோசனைகள் வழங்கப்பெற்றன. உலகத்திருக்குறள் மையத்துடன் இணைந்து பன்னாட்டு ஆய்வு மாநாடு ஒன்றினை அமைப்பது குறித்தும் திட்டமிடப்பெற்றது.

தொடர்ந்து தமிழ்த்துறை மாணவர்களுக்கு **நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள், தமிழ் ஆளுமைகள், தமிழ் இலக்கியங்கள்** என ஒவ்வொரு பருவத்தேர்வுகளின் நிறைவிலும் **விடுமுறை கால ஒப்படைப்பு பணிகளை** வழங்கிவருகிறோம். அவற்றை அவர்கள் ஒப்படைத்தப்பின் வேலைநாள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகுப்பிலும் அவ்வகுப்பு மாணவர் தனது தலைப்பில் ஐந்து நிமிடம் ஒப்படைப்பால் பெற்ற தகவல்களைப் பகிர்வதான **நாள்மேடை** என்ற அமைப்பை உருவாக்கலாம் என்றும் அது மாணவர்களின் மொழி ஆளுமையை பல நிலைகளிலும் வளர்க்கும் என்ற கருத்தும் முன்வைக்கப்பெற்று ஏற்றுகொள்ளப்பெற்றது.

**Signature of Members:**

1. Dr. J. RADHAKRISHNAN - 6/8/24
2. Dr. G. JAYASHREE -
3. Dr. T.S.JEYALAKSHMI - 6/8/24
4. Dr. S. SIVAGAMASUNDARI - 6/8/2024
5. Mr. S. DEIVASIGAMANI - 6/8/24
6. Dr. S. NEELAMEGAN - 6/8/24
7. Dr. N. APPADURAI - 6/08/24
8. Mr. B. VELU -
9. Mr. M. GANAPATHY - 6/8/24
10. Dr. M. ANBAZHAGAN - 6.8.24
11. Dr. K.R. VENKATESAN -